பள்ளிக் கல்வி (ப.க.4(1))த் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–9.

**கடித எண்.8082/ப.க.4(1)/2021–2, நாள் 25.05.2021**

அனுப்புநர்
திரு.தீரஜ் குமார், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
முதன்மைச் செயலாளர்/கருவூல கணக்கு ஆணையர், சென்னை–35.
அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள்/
சார்நிலைக் கருவூல அலுவலர்கள்
சார்நிலைக் கருவூலம்,
கருவூல கணக்கு ஆணையர்
மாநில கணக்காயர், சென்னை –18.

ஐயா,

பொருள் பள்ளிக் கல்வி – 5000 ஆசிரியரல்லாத பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டது–தற்போது அப்பணியிடங்களில் பணிபுரியும் 1272 பணியாளர்களுக்கு – மே 2021 மாதத்திற்கு ஊதியம் பெறத்தக்க வகையில் ஊதிய கொடுப்பு ஆணை (Pay Authorization) வழங்குதல் – குறித்து.

பார்வை
1. அரசாணை (நிலை) எண்.47, பள்ளிக் கல்வித் (ஆர்.1) துறை, நாள் 2.3.2012.
2. அரசாணை (1டி) எண்.252, பள்ளிக் கல்வித் (ப.க.4(1)) துறை, நாள் 12.04.2018.
3. அரசாணை (நிலை) எண்.50, பள்ளிக் கல்வித் (ப.க.4(1)) துறை, நாள் 8.3.2019.
4. அரசாணை(நிலை)எண்.78, பள்ளிக் கல்வித் ப.க.4(1)துறை, நாள் 29.04.2019
5. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.000608/எல்/இ3/2021, நாள் 27.01.2021 21.04.2021 (ம) 23.04.2021.
6. அரசு கடித எண்.8082/ப.க.4(1)/2021–1, நாள் 30.04.2021.
7. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண். 000608/எல்/இ3/2021, நாள் 6.5.2021

-------

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு 2999 துப்புரவாளர் பணியிடங்கள் ரூ.1300–3000 + ரூ.300/– தர ஊதியம் என்ற சிறப்பு காலமுறை ஊதிய விகிதத்திலும், 2001 காவலர் பணியிடங்கள் ரூ.4800–10,000+ ரூ.1,300/– தரஊதியம் என்ற காலமுறை ஊதிய விகிதத்திலும் மொத்தம் 5000 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கடைசியாக மேற்காண் 2999 துப்புரவாளர் மற்றும் 2001 காவலர் ஆக மொத்தம் 5000 பணியிடங்களுக்கு 01.01.2018 முதல் 31.01.2020 வரை தொடர் நீட்டிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தோற்றுவிக்கப்பட்ட 2999 சிறப்பு காலமுறை துப்புரவாளர் பணியிடங்களில் நிரப்பப்பட்ட 2213 துப்புரவு பணியாளர்களில் அவ்வமயம் பணியிலிருந்த 1692 நபர்களுக்கு மட்டும், அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் கருத்தியலாக ரூ.4800–10,000 +தர ஊதியம் ரூ.1300/– என்ற காலமுறை ஊதியம் நிர்ணயம் செய்து மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மேற்படி 1692 பணியாளர்களில் 2 பணியாளர்களின் பெயர்கள் நீக்கம் செய்து மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணைக்கு திருத்தம் வெளியிடப்பட்டது.

4. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களுக்கான தொடர் நீட்டிப்பு 31.1.2020ல் முடிவடைந்த நிலையில், அப்பணியிடங்களில் பணிபுரிந்து வரும் 778 துப்புரவாளர் மற்றும் 494 இரவுக் காவலர் ஆக மொத்தம் 1272 பணியாளர்களது பணியிடங்களுக்கு மட்டும் 01.01.2021 முதல் 31.12.2023 வரை தொடர் நீட்டிப்பு ஆணை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும், இக்கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. மேற்காணும் 1272 பணியிடங்களில் பணிபுரியும் பணியாளர்கள் மே 2021 மாதத்திற்கான ஊதியம் பெறத் தக்க வகையில் ஊதிய கொடுப்பாணை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கோரியுள்ளார்.

5. பள்ளிக் கல்வி இயக்குநரின் 778 துப்புரவாளர் மற்றும் 494 இரவு காவலர் ஆக மொத்தம் 1272 பணியாளர்களது தொடர் நீட்டிப்பு குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்நிலையில் பள்ளிக் கல்வி இயக்குநரின் கோரிக்கையினை ஏற்று, அரசாணை (நிலை) எண்.47, பள்ளிக் கல்வி (ஆர்1)த் துறை, நாள் 02.03.2012–ன் மூலம் தோற்றுவிக்கப்பட்ட 2999 துப்புரவாளர் பணியிடம் மற்றும் 2001 காவலர் பணியிடம் ஆக மொத்தம் 5000 பணியிடங்களில், இக்கடித இணைப்பில் குறிப்பிட்டுள்ளவாறு தற்போது பணிபுரிந்து வரும் 778 துப்புரவாளர் மற்றும் 492 இரவுக்காவலர் ஆக மொத்தம் 1270 பணியாளர்கள் மே 2021ம் மாதம் ஊதியம் பெறத்தக்க வகையில் ஊதிய கொடுப்பாணை வழங்கப்படுகிறது. மேற்படி பணியாளர்களது சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான பட்டியல் உரிய அலுவலர்களால் தாக்கல் செய்யப்படும் போது, ஏனைய இனங்களில் அவை சரியாக இருக்கும் நிலையில் அதனை ஏற்று சம்பளம் அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள

25/5/2021

(அரசு சார்புச்செயலாளர்)

அரசு முதன்மைச் செயலாளருக்காக.

இவ்வலுவலக ந.க.எண். 000608/எல்/இ3/2021 நாள்: 27.5.2021

நகல் தகவலுக்காக, தக்க நடவடிக்கைக்காக அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்படுகிறது.

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

Joint Director (P)

Directorate of School Education, Chennai-6.

27/5/21